<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.1, ஜெயங்கொண்டம்.</u>

<u>CC No. 92/2019</u>

2026ம் ஆண்டு ஜுன் மாதம் 30ஆம் நாள் செவ்வாய் கிழமை அரசு தரப்பு சாட்சி–01, திரு.டென்ஸ்ராஜ் என்பவரின் வாக்குமூலம் (1969ம் ஆண்டின் 56வது விதியின் பிரிவின் ஏற்பாட்டின்படி) திரு.செ.சாஸ்தா குமரன், மூன்றாம் நிலை எழுத்தர் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு.டென்ஸ்ராஜ் | வயது | : | 42/26 |
| த.பெ. | : | அந்தோணிசாமி | தொழில் | : | சுயதொழில் |
| ஊர் | : | எரவாங்குடி | நிலை | : | LW1/ PW01 |
| வட்டம் | : | | நாட்டினம் | : | இந்தியன் |
| மாவட்டம் | | | | | |

(எதிரி ஆஜர்)

<u>முதல் விசாரணை:</u>

நான் எரவாங்குடியில் வசித்து, சுயதொழில் செய்து வருகிறேன். சுமார் 8 வருடங்களுக்கு முன்பு ஒருநாள், என் அண்ணனும் எதிரி வின்சென்ட் என்பவரும் இருசக்கர வாகனத்தில் வேலைக்கு சென்றுவிட்டு, வின்சென்ட் வண்டியை ஓட்ட என் அண்ணன் பின்னால் அமர்ந்துக்கொண்டு வீட்டிற்கு திரும்பி கல்லாத்தூரில் இருந்து எரவாங்குடிக்கு வடவீக்கம் கல்லறை அருகில் வந்துக்கொண்டிருந்தபோது, திடீரென்று மாடு குறுக்கே வந்ததால், இருவரும் வண்டியிலிருந்து கீழே விழுந்துவிட்டார்கள் என்று எனக்கு போன் மூலம் தகவல் தெரிவித்தார்கள். நான் சம்பவ இடத்திற்கு சென்று பார்த்தபோது, என் அண்ணனுக்கு தலையில் பலத்த காயம் ஏற்பட்டிருந்தது. வின்சென்ட்க்கு கையில் காயம் ஏற்பட்டது. எனது அண்ணனை 108 ஆம்புலன்ஸ் மூலம்

ஜெயங்கொண்டம் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். பின்னர் மேல் சிகிச்சைக்காக தஞ்சாவூர் மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றோம். அங்கு சிகிச்சை பலனின்றி என் அண்ணன் இறந்துவிட்டார். இது சம்மந்தமாக நான் ஜெயங்கொண்டம் போலீசார் என்னை விசாரித்து, புகார் வாக்குமூலம் பெற்றார்கள். நீதிமன்றத்தில் தற்போது என்னிடம் காண்பிக்கப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். அந்த கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.

**அரசு தரப்பில் சாட்சி பிறழ் சாட்சியாக கருதி குறுக்கு விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டதன் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் கு/வி.**

ஆஜர் எதிரி எனக்கு உறவினர் ஆவார். கடந்த 10.06.2018 ம் தேதி இரவு 07.00 மணியளவில், என் அண்ணனும் எதிரி வின்சென்ட் என்பவரும் எதிரியின் TVS Super XL இருசக்கர வாகனத்தில் எதிரி ஓட்ட என் அண்ணன் பின்னால் உட்கார்ந்துக்கொண்டு கல்லாத்தூர் சென்றுவிட்டு மீண்டும் வீட்டிற்கு வருவதற்காக கல்லாத்தூரிலிருந்து எரவாங்குடி செல்லும் தார் சாலையில் வடவீக்கம் கல்லறை அருகில் கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி வந்துக்கொண்டிருந்தபோது, எதிரி வாகனத்தை அதிவேகமாகவும், அஜாக்கிரதையாகவும், கவனக்குறைவாகவும் ஓட்டி வந்து கீழே விழுந்தார் என்றும், அதில் என் அண்ணனுக்கு கை முட்டி, இடது நெற்றி, மூக்கு ஆகிய இடங்களில் பலத்த இரத்தக் காயம் ஏற்பட்டு, அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக போலீசார் விசாரணையில் சொல்லிவிட்டு, தற்போது வழக்கு சம்பவத்தை மறைத்து எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –** இல்லை

**மறு விசாரணை –** இல்லை

/ உண்மை நகல் /
ஒம்/-ப.கனிமொழி,
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண் 1,
ஜெயங்கொண்டம்.